**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**08 மே 2015 / 19 ரஜப் 1436**

# <u>இறை நம்பிக்கையும், சிந்திப்பதன் பால் அழைப்பு விடுப்பதும்</u>

اَلْحَمْدُ للهِ الَّذِيْ شَرَعَ لِلنَّاسِ مَا فِيْهِ مَصْلَحَتُهُمْ فَأَمَرَهُمْ بِكُلِّ مَا
فِيْهِ نَفْعُهُمْ وَنَهَاهُمْ عَنْ كُلِّ مَا يَضُرُّهُمْ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
الَّذِيْ أَعَزَّهُمْ بِهِ بَعْدَ الذِّلَّةِ وَجَمَعَهُمْ بِهِ بَعْدَ الْفُرْقَةِ. اَللَّهُمَّ صَلِّ
وَسَلِّمْ عَلَى عَبْدِكَ وَرَسُوْلِكَ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ
أَهْلِ النَّجْدَةِ وَالشَّهَامَةِ. أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللهَ حَيْثُ
مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ يَعْلَمُ سِرَّكُمْ وَعَلاَنِيَتَكُمْ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும் அவன் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியை அதிகரித்துக் கொள்ள கடின

முயற்சி செய்வோமாக! "ஈமான்" (இறை நம்பிக்கை) மற்றும் "தக்வா" (இறை பக்தி) ஆகிய இரண்டும் அருளப்பட்ட அடியார்களில் நின்றும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மை ஆக்குவானாக!

எனது சகோதரர்களே!

ஒவ்வொரு நொடிப் பொழுதும், எல்லா நிலையிலும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது நாம் "ஈமான்" மற்றும் "தக்வா" வை உறுதியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென அவ்வப்போது, ஒவ்வொரு வாரமும் நினைவூட்டப்படுகிறோம். இவ்வாறு நினைவூட்டுவது வெள்ளிக்கிழமைப் பிரசங்கம் கூடுவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாகும். இவ்விதமான நினைவூட்டுதல் இல்லையெனில், குத்பா பிரசங்கம் குறையுள்ளதாக ஆகி விடும். அது செல்லத் தகாததாகக் கூட ஆகி விடலாம்.

எனினும், எனது சகோதரர்களே! "ஈமான்" என்றால் பொருள் என்ன? எதனை நாம் ஈமான் என்று கருதுகிறோம்? ஒருவர் ஈமானுடன் இருப்பதற்கு எவ்விஷயங்கள் அவரிடம் காணப்பட வேண்டும்? எனச் சிந்திப்பது அவசியமாகும்.

மேற்கண்ட கேள்விகளை முழுமையாக நாம் அறிந்து கொள்வதற்கு கடின முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக, மத சம்பந்தமான விழிப்புணர்வும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டுள்ள இந்நவீன கால சமூகச் சூழ்நிலையில் இக்கேள்விகளையும் அதற்கான பதில்களையும் அலசி ஆராய்வது அவசியமாகும். இஸ்லாமிய சமூகம் மற்றும் ஏனைய அனைத்து சமூக மக்களிடமும் இவ்விதமான மறுமலர்ச்சிகள், விழிப்புணர்வுகள் ஏற்பட்டுள்ளன. "ஈமான்" என்றால் என்ன என்பதைச் சரியாக

அறியாதிருந்தால் அதில் மாறுபட்ட கருத்துகளும், புரிதல்களும் ஏற்பட்டு விடும். அக்கருத்துக்களில் சிலவை மார்க்கத்துடன் சிறிதும் சம்பந்தமில்லாததாக இருக்கும் நிலையில், அவை மார்க்கத்தின் பகுதியாகக் கருதப்படவும், தவறாகப் புரிந்து கொள்ளப்படவும் வாய்ப்புள்ளது.

ஜமாஅத்தார்களே!

நாம் திருக்குர்ஆனை ஆய்வு செய்து பார்த்தால், அதன் பல வசனங்கள் இறைவனின் படைப்புகளைப் பற்றிக் கூறுவதைக் காணலாம். வானங்கள் மற்றும் பூமியின் பேரழகை எடுத்து இயம்புவதைக் காணலாம். திருக்குர்ஆனின் "அல்-முல்க்" எனும் அத்தியாயத்தின் 3-4 வசனங்களில் இறைவன் கூறுகின்றான்:

ٱلَّذِى خَلَقَ سَبْعَ سَمَٰوَٰتٍ طِبَاقًا ۖ مَّا تَرَىٰ فِى خَلْقِ ٱلرَّحْمَٰنِ مِن تَفَٰوُتٍ ۖ
فَٱرْجِعِ ٱلْبَصَرَ هَلْ تَرَىٰ مِن فُطُورٍ ﴿٣﴾ ثُمَّ ٱرْجِعِ ٱلْبَصَرَ كَرَّتَيْنِ يَنقَلِبْ إِلَيْكَ
ٱلْبَصَرُ خَاسِئًا وَهُوَ حَسِيرٌ ﴿٤﴾

பொருள்: ஏழு வானங்களையும் அடுக்கடுக்காக அவனே (அல்லாஹ்) படைத்தான்; (மனிதனே!) அளவற்ற அருளாளனின் படைப்பில் எவ்விதக் குறைபாட்டையும் நீ காணமாட்டாய்; பின்னரும் பார்வையை (வானத்தின் பால்) நீ மீட்டிப்பார்; (அங்கே) ஏதேனும் பிளவை நீ காண்கிறாயா?. பின்னர் இருமுறை உன் பார்வையை நீ மீட்டிப்பார்; அப்பார்வை இழிவடைந்ததாக, களைப்புற்று உன்னிடமே திரும்பி விடும்.

இங்கு, மேற்கொண்டு எழுகின்ற கேள்வி என்னவெனில், திருக்குர்ஆனில் அல்லாஹ் தனது படைப்புகளைப் பற்றி ஏன் விளக்கமளிக்கின்றான்? என்பதாகும். அல்லாஹ்வின் படைப்புகள் அல்லாஹ்வின் சக்திக்கும் ஆற்றலுக்கும் சாட்சியாக உள்ளதால் அப்படைப்புகளில் சிந்தனை செய்யுமாறும், அல்லாஹ்வின் படைப்புகளை நன்கு அறியுமாறும் திருக்குர்ஆனின் வசனங்கள் நம்மைக் கேட்டுக் கொள்கின்றன. காரணம், ஈமானுடன் உள்ள ஒருவரிடம், அவரது ஈமான், சிந்தனையில் ஈடுபடுமாறும், சிந்தித்தவற்றை தெளிவாகப் புரிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறது. சிந்திக்காமல், முறையான வழிகாட்டுதலைத் தேடாமல் எதனையும் கண்மூடித்தனமாக ஏற்பது முறையல்ல.

சிந்திக்குமாறும், தனது அறிவாற்றலைப் பயன்படுத்துமாறும் திருக்குர் ஆனின் பல வசனங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. உதாரணமாக, அல்லாஹ் பல தடவை நமக்கு பின்வருமாறு நினைவூட்டுகின்றான்:

أَفَلاَ تَعْقِلُون

أَفَلاَ تَتَفَكَرُوْن

பொருள்: "நீங்கள் சிந்திக்க வேண்டாமா?" "நிதானமாக, ஆழ்ந்து யோசனை செய்ய வேண்டாமா?"

இது போன்ற வசனங்கள், மனிதர்களில் ஒவ்வொருவரும் தாம் நம்பியுள்ள விஷயங்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டும், ஒவ்வொரு

விஷயத்தையும் அவர்கள் எடைபோட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்களைச் சிந்திக்குமாறும், அவர்கள் தமது அறிவாற்றலைப் பயன்படுத்துமாறும் ஆர்வப்படுத்துகின்றன.

அன்பிற்குரிய எனது சகோதரர்களே!

சிந்திக்க வேண்டும்; ஆழ்ந்து யோசிக்க வேண்டுமென்ற திருக்குர்ஆனின் மையக் கருத்தையும், உயிரோட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு, ஒரு ”முஃமின்” (இறை நம்பிக்கையாளர்) தனது வாழ்வில் எதிர்கொள்ளும் துருதிஷ்டமான நிலைகளை எவ்வாறு சமாளிப்பது என்பதற்குச் சில வழிகாட்டுதல்கள் இங்கு வழங்கப்படுகின்றன.

**முதன்முதலாக, ஒவ்வொரு இறை நம்பிக்கையாளரும் பகுத்து ஆராய்ந்து அறிவது அவசியமாகும்.**

இஸ்லாம், தன்னைப் பின்பற்றுவோரிடம், அவர்கள் அடைந்து கொள்ளும் சன்மார்க்கக் கல்வி விஷயத்தில் ஆழ்ந்து யோசிக்குமாறு ஆர்வப்படுத்து கின்றது. குறிப்பாக, அக்கல்வியறிவுகள் இண்டெர்நெட் மூலம் பெறப்பட்டால் அவற்றில் சிந்திப்பது மிகவும் அவசியமாகும். நாம் பெறுகின்ற செய்திகள் ஆதாரப்பூர்வமானவையா? ஏற்கத்தக்கவையா? அத்தகவல்களுக்கு ஆதாரம் என்ன? குறிப்பிட்ட இந்த வசனத்துக்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கம் சரியானவையா? அறிஞர்களிடம் இதற்கு எந்தளவு அங்கீகாரம் உள்ளது? என்றெல்லாம் அலசி ஆராய்வது அவசியமாகும். தனது மார்க்கத்தை நன்கு அறிந்து கொள்வதற்கு,

உண்மையாக முயலும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மேற்கண்ட கேள்விகளை தமக்குக் தாமே கேட்டுத் தெளிவு பெறுவது அவசியமாகும்.

எனது சகோதரர்களே!

**இரண்டாவதாக, ஒவ்வொரு முஃமின் இடமும் "ஹிக்மத்" (நுண்ணறிவு) காணப்படுவது அவசியமாகும்.**

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஹதீதுகளை ஆய்வு செய்து பார்த்தால், ஒரு "முஃமின்" அறிவுப்பூர்வமான தனிநபராக இருப்பார் எனச் சுட்டிக் காட்டும் பல ஹதீதுகளைக் காணலாம். உதாரணமாக:

"ஒரு "முஃமின்" (நஞ்சுப் பிராணிகள் வாழும்) பொந்திலிருந்து இருமுறை கொட்டப்படமாட்டார்" என இறைத்தூதர்(ஸல்) நவின்றுள்ளார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

ஒவ்வொரு முஃமினும், அவர் தன்னிடம் "ஈமான்" உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில், அறிவுப்பூர்வமாகச் செயல்படுபவராக இருப்பார்; நுண்ணறிவைப் பயன்படுத்தி, அறிவுத்திறன் மிக்கவராகவும் இருப்பார். காரணம், அவரது "ஈமான்" அவரைச் சிந்திக்குமாறு தூண்டுகிறது. இறை நம்பிக்கைக் கொண்டுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தாம் செய்த தவறுகளை மீண்டும் மீண்டும் செய்பவர்களாக இருக்கமாட்டார்கள்.

மேற்கண்ட ஹதீது முதற்கொண்டு இன்னும் எத்தனையோ ஹதீதுகள், ஒரு உண்மையான முஃமின், சிந்திக்கும் ஆற்றல்மிக்கவராக இருப்பார் எனவும், தீர்மானிப்பதிலும், விஷயங்களைக் கணிப்பதிலும் சிறந்தவராக இருப்பார் எனவும் சுட்டிக் காட்டுகின்றன. முஃமினான ஆண், பெண்கள்

எதனையும் அவசரப்பட்டு செய்யமாட்டார்கள். சவால்களை எதிர்கொள்ளும் போது குழம்பிக் கொள்ளமாட்டார்கள்; சஞ்சலமடைய மாட்டார்கள். காரணம், சவால்கள் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியாக உள்ளன. எனவே விஷயங்களையும் சவால்களையும் நன்கு பரிபூரணமாக அறிந்து செயல்படுவதற்கு முயற்சிப்பது தான் இங்கு அவசியமாகும்.

**மூன்றாவதாக, ஒருவர் தனது மார்க்கத்தை, கல்வியறிவை அடிப்படையாகக் கொண்டு அறிவது அவசியமாகும்.**

ஒருவரிடம், அவரது மார்க்கத்தில் சிறந்த பிடிப்பு ஏற்பட வேண்டுமெனில், சன்மார்க்கக் கல்வியறிவை அவர் மிகப் பெரிய அளவில் பெறுவதற்கு கடின முயற்சி செய்ய வேண்டும். அதே சமயம், மார்க்கத்தை திருக்குர்ஆன் வசனங்கள் மற்றும் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஹதீதுகளின் மூலம் அறிந்து கொள்ள விரும்பும் தனிநபர்களுக்கு அதற்காகத் தனது நேரத்தையும் சக்தியையும் செலவழிப்பது அவசியமாக உள்ளது என்பதை மறுப்பதிற்கில்லை. ஒவ்வொரு முஃமினான ஆண், பெண்ணும் திருக்குர்ஆனைச் சிறப்பாகப் புரிந்து கொள்ள வேண்டுமெனில், அவர்கள் தமது மார்க்கத்தை அறிவது கடமையாக உள்ளது. சகோதரர்களே! அறிந்து கொள்ளுங்கள்! நமது மண்ணறையில் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று ”உனது இமாம் யார்?” என்பதாகும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அத்-தைலமீ ரஹ்)

எவர்கள் தமது வாழ்வில் திருக்குர்ஆனுடன் அதிகத் தொடர்பை ஏற்படுத்தி, அதனை உற்சாகமாக ஓதுவதற்கு கடின முயற்சி செய்தார்களோ அவர்கள் அதன் போதனைகளை நன்கு அறிந்து கொள்ளட்டும்; அதில் காணப்படும்

விஷயங்களை மேற்கொண்டு அறிந்து கொள்ள முயற்சிக்கட்டும். அவர்கள் தான் “எங்களுடைய இமாம் திருக்குர்ஆன்” என மண்ணறையில் பதில் கூறும் ஆற்றலைப் பெறுவார்கள்.

எனவே, ரமதான் மாதம் நெருக்கி வருவதை அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, திருக்குர்ஆனை அதிகம் ஓதுவதற்கு முயல்வோமாக! நாடு முழுவதிலுமுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படும் சன்மார்க்க வகுப்புகளில் கலந்து பயனடைவோமாக! நமது இம்முயற்சிக்கள் அல்லாஹ்வினால் அருள் புரியப்பட வேண்டுமென்றும், திருக்குர்ஆனையும் அதன் போதனைகளையும் தொடர்ந்து அறிந்து கொள்வதற்கு அருள் புரிய வேண்டுமென்றும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! நம்மைச் சிந்திக்கவும் ஆழ்ந்து யோசிக்கவும் தூண்டுகின்ற, நமது மார்க்கத்தை நன்கு புரிந்து கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்துகின்ற ”ஈமான்” வழங்கப்பட வேண்டுமென்றும் வேண்டிக் கொள்வோமாக! இன்ஷாஅல்லாஹ். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيمِ ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ، أَقُولُ قَوْلِي هذَا وَأَسْتَغْفِرُاللهَ الْعَظِيمَ لِي وَلَكُمْ ، وَلِسَائِرِ الْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ ، وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِينَ وَيَا نَجَاةَ التَّائِبِينَ.